IntSym 2019
9th International Symposium

# திகன வன்முறையும் அதன் விளைவுகளும்: இலங்கையின் அனுபவங்கள்

**A.J. Mahran[270] & S.L.M. Israth Ali[271]**

Correspondence: mahranjasan162@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

மனித சமுதாயத்தில் இன்றியமையாத எண்ணக்கருக்களில் ஒன்றாக வன்முறை காணப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் தற்காலத்தில் பல்வேறு வடிவங்களில் எல்லா சமூகத்திலும் பரவலாக பேசப்படுகின்ற ஒரு சொல்லாக வன்முறை காணப்படுகிறது. அந்த அடிப்படையில் இலங்கையின் தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தின் கீழும் சிறுபான்மை முஸ்லிம்கள் பல்வேறு அடக்குமுறைகளுக்கும் வன்முறைகளுக்கும் உட்பட்டு வருகின்றனர். அதனடிப்படையில் அண்மையில் இடம்பெற்ற திகன கலவரத்தை மையமாகக் கொண்டு தொடர்ச்சியாக இந்த நாட்டில் சிறுபான்மையினர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற வன்முறைகள் தொடர்பான பல்வேறு விடயங்கள் இவ் ஆய்வின் ஊடாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் நோக்கங்களைப் பொறுத்த வரை இலங்கையின் தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தில் சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிராக திகன கலவரமானது மேற்கொள்ளப்பட்டமைக்கான காரணிகளைக் கண்டறிதல், திகன கலவரத்தினை எதிர்கொள்வதில் முஸ்லிம் அரசியல் தலைமைகளின் பங்களிப்புக்களை கண்டறிதல், திகன கலவரத்திற்கு பின்னர் சிறுபான்மை முஸ்லிம்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளைக் கண்டறிதல் மற்றும் தற்போது சிங்கள முஸ்லிம் உறவு நிலை திகனப் பகுதியில் எவ்வாறு காணப்படுகின்றது என்பதன் தெளிவினைப் பெறல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவ் ஆய்வினை மெற்கொள்ள முதலாம் நிலைத்தரவுகளாக நேர்காணல், நேரடி அவதானிப்பு மற்றும் வினாக்கொத்து போன்றனவும் இரண்டாம் நிலைத்தரவுகளாக குண்டசாலை மற்றும் தெல்தெனிய பிரதேச செயலக தரவுகள், வன்முறை தொடர்பான புத்தகங்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் முன்னைய ஆய்வுக்கட்டுரைகள் போன்றவற்றின் ஊடாக தகவல் சேகரிக்கப்பட்டு இத்தரவுகள் அனைத்தும் பண்புசார், அளவு சார் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்பட்டு Ms-Excel Package போன்ற மென்பொருள் பயன்படுத்தப்பட்டன. இந்த ஆய்வின் முடிவின் படி 67% மக்கள் திகனக் கலவரத்திற்கான பிரதான காரணமாக முஸ்லிம்களின் பொருளாதாரத்தினை மையமாகக் கொண்டு மெற்கொள்ளப்பட்டதாக குறிப்பிடப்படுகின்றனர். மேலும் 53% மக்கள் கலவரத்தின் போது அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மீது அதிருப்தியுற்றவர்களாக காணப்படுகின்றனர். மேலும் 35% மக்கள் தற்போது திகன பகுதிகளில் சிங்கள – முஸ்லிம் உறவுநிலையானது ஓரளவு திருப்தியானதாக காணப்படுவதாகக் குறிப்பிடுகின்றனர்.

**பிரதான சொற்கள்:** வன்முறை, திகன, முஸ்லிம

## 1.0 அறிமுகம்

இலங்கையானது பல்லினங்கள் செறிந்து வாழுகின்ற நாடாகும். இங்கு இன ரீதியான வன்முறையானது ஆரம்ப காலம் தொடக்கம் இன்று வரை இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக தமிழ் மக்களுக்கு எதிராக கடந்த பல வருடங்களாக மேற்கொள்ளப்பட்டு வந்த வன்முறையானது தற்போது முஸ்லிம் மக்களின் பக்கம் திரும்பி இருக்கின்றது. இலங்கையின் இரத்தக்கறை படிந்த வரலாற்றுப் பக்கங்கள் தெளிவாகக் கண்டு கொள்ளப்பட்ட காலப்பகுதியாக 1970 ஆண்டு காலப்பகுதி காணப்படுகிறது. தனித்தமிழீழ அரசினை உருவாக்குவதனை நோக்காகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்ட விடுதலைப்புலிகளின் செயற்பாடு மிகத் தீவிரமடைந்தது. 1970ம் ஆண்டு ஆட்சிப் பீடம் ஏறிய அரசாங்கமும் அதே பாணியிலேயே சிறுபான்மையின மக்களுக்கு அச்சுறுத்தலாகவே காணப்பட்டன. இதன் காரணமாக 1983 ஜுலையில் பாரிய இனக்கலவரம் தோற்றம் பெற்று இனங்களுக்கிடையே முறுகல் நிலை ஏற்பட்டது. இதனைத் தீர்ப்பதற்காக பிற்பட்ட காலப்பகுதிகளில் பல்வேறு பேச்சு வார்த்தைகள் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக இடம்பெற்றது. 1985ம் ஆண்டு நேபாளத்தின் திம்புவில் இலங்கை அரசாங்கத்திற்கும் - தமிழ் தரப்புகளுக்குமிடையிலான

[270] Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka.
[271] Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka.

சமாதானப் பேச்சு வார்த்தைகள் மற்றும் 1987ம் ஆண்டு இலங்கை - இந்தியா உடன்படிக்கை போன்றன குறிப்பிடத்தக்கவையாகும். அதனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ மற்றும் சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரத்துங்க போன்றோர் விடுதலைப்புலிகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளும் முரண்பாட்டின் போக்கை மாற்றியதே தவிர எதிர்பார்த்த எந்த வெற்றியையும் பெற்றுக் கொடுக்க வில்லை. தொடர்ச்சியாக அரச தரப்புக்களுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான யுத்தம் தொடர்கதையாகவே இருந்தமை குறிப்பிடத்தக்கது (ஆலிப், 2015, 11).

சர்வதேச ரீதியாக முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு வகையில் இனவன்முறைகளானது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்தப் பின்னணியில் இலங்கையிலும் அண்மைக்காலமாக திட்டமிட்ட அடிப்படையில் இன முரண்பாடானது பல்வேறு தரப்புக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அந்த வகையில் இவ் ஆய்வானது சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற திகன வன்முறை தொடர்பாக ஆராய்கின்றது.

## 2.0 ஆய்வுப் பிரச்சினை

இலங்கையில் கடந்த 30 வருடகாலமாக இந்த நாட்டினை அழிவுப்பாதைக்கு கொண்டு சென்ற யுத்தமானது 2009ம் ஆண்டு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் இன நல்லிணக்கம் இந்த நாட்டில் ஏற்பட்டு அனைவரும் ஒற்றுமையாகவும் புரிந்துணர்வுடனும் செயற்படுவார்கள் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும் துரதிஷ்டவசமாக பௌத்த சிந்தனைகளைக் கொண்ட அமைப்புக்கள் மற்றும் மதத்தலைவர்கள் யுத்தத்திற்குப் பின்னர் தொடர்ச்சியாக சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு இன மோதல்கள் மற்றும் வன்முறைகளை ஏற்படுத்தி வந்தனர். இதன்காரணமாக ஆட்சி மாற்றம் ஒன்று தேவைப்பட்டதனால் 2015 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் பல்வேறு வாக்குறுதிகளை வழங்கி ஆட்சிபீடம் ஏறிய நல்லாட்சி அரசாங்கத்தினால் அந்த மக்களுக்கு உரிய தீர்வினைப் பெற்றுக்கொடுக்க முடியாமல் போய்விட்டது. தொடர்ச்சியாக பௌத்த அமைப்புக்களாலும் மதவாத சிந்தனையாளர்களாலும் இன ரீதியான வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த அடிப்படையில் சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்ற திகன கலவரத்தை மையமாக்கொண்டே இவ்வாய்வுப் பிரச்சினை நோக்கப்பட்டுள்ளது.

## 3.0 ஆய்வின் நோக்கம்

நல்லாட்சி அரசாங்கத்தில் சிறுபான்மை முஸ்லிம்களின் நிலைப்பாடு: விஷேட ஆய்வாக திகன கலவரமானது சிங்கள முஸ்லிம் உறவில் தற்போது எவ்வாறான சூழ்நிலையினை தோற்றுவித்திருக்கின்றது என்பதை பிரதான நோக்கமாகவும் பின்வருவனவற்றை உப நோக்கங்களாகவும் கொண்டு இவ் ஆய்வானது இடம்பெற்றுள்ளது.

1. இலங்கையில் நல்லாட்சி அரசாங்கத்தில் சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிராக திகன கலவரமானது மேற்கொள்ளப்பட்டமைக்கான காரணிகளைக் கண்டறிதல்.
2. திகன கலவரத்தின் விளைவுகளை கண்டறிதல்.
3. திகன கலவரத்தின் பின்னரான நிலைப்பாட்டினை தெளிவுபடுத்தல்.

### 4.0 ஆய்வின் முக்கியத்துவம்

இலங்கையின் தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தில் சிறுபான்மை முஸ்லிம்களின் நிலைப்பாடு என்ற தொனிப்பொருளில் விஷேட ஆய்வாக கண்டி திகன வன்முறை தொடர்பாக இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த வன்முறை தொடர்பாக பல்வேறு கருத்துக்கள் அரசியல் சிந்தனையாளர்களாலும் கல்வியியலாளர்களாலும் முன்வைக்கப்பட்டு வருகின்றது. எனினும் இந்த வன்முறை தொடர்பாக ஆய்வு ரீதியாக பெறப்பட்ட கருத்துக்களும் தகவல்களும் குறைவாகவே காணப்படுகின்றது. இந்நிலையில் திகன கலவரம், அதனால் ஏற்பட்ட விளைவுகள், அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள், முஸ்லிம் அரசியல் தலைமைகளின் செயற்பாடுகள் மற்றும் பௌத்த அமைப்புக்களின் தாக்கம் போன்ற பல்வேறு விடயங்களை இவ்வாய்வானது ஆராய்கின்றது. மேலும் இந்த ஆய்வானது தற்போதைய சூழ்நிலைக்கேற்ப மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இப்பிரச்சினை தொடர்பான ஆய்வுகள் முறைமைப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டமையானது மிகவும் அரிதாக காணப்படுவதனால் இவ் ஆய்வு இடைவெளியினைப் பூர்த்தி செய்யும் அடிப்படையில் இந்த ஆய்வானது முக்கியம் பெறுகின்றது.

இலங்கையினைப் பொறுத்த வரைக்கும் பல்லினங்கள் செறிந்து வாழுகின்ற நாடாக உள்ளதால் இவ்வாறான இன ரீதியான கலவரங்கள் சிறுபான்மை சமூகங்களுக்கு இடையில் எவ்வகையான மனோநிலையினை ஏற்படுத்துகின்றது என்பதை ஆய்வு செய்ய வேண்டிய காலத்தின் தேவை தற்போது உருவாகி இருக்கின்றது. மேலும் இன ரீதியாக சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிராக காலத்துக்குக் காலம் வன்முறைகள், கலவரங்கள் மற்றும் முரண்பாடுகள் அரங்கேற்றப்படுவதானது அனைத்து மக்களுடைய உறவு நிலையில் பாரிய எதிர் விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றது. இவ்வாறான கருத்தாடல்களை முதன்மைப்படுத்தி அண்மையில் திகன பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறையின் ஊடாக பாதிப்புக்குள்ளான சிங்கள மற்றும் முஸ்லிம் உறவு நிலையானது தற்போது எவ்வாறு காணப்படுகின்றது என்பதை இவ்வாய்வானது மேற்கொண்டுள்ளது. இந்த அடிப்படையில் ஆய்வானது சிங்கள முஸ்லிம் உறவு நிலையானது ஆய்வுப்பிரதேசங்களில் தற்போது எவ்வாறு காணப்படுகிறது என்பதை ஆய்வு செய்துள்ளமையால் இந்த ஆய்வானது முக்கியம் பெறுகின்றது.

### 5.0 ஆய்வு முறையியல்

ஆய்வானது சமூக விஞ்ஞான ஆய்வாக காணப்படுகின்றமையால் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் சேகரிக்கும் முறையானது பயன்படுத்தப்பட்டு பெறப்பட்ட தகவல்கள் அனைத்தும் அளவுசார் மற்றும் பண்புசார் முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

முதலாம் நிலைத் தரவு சேகரிப்பு முறையில் திகன கலவரம் தொடர்பாக மக்களிடத்தில் நேர்காணல் 20 மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் முஸ்லிம்கள் 16 பேரும் சிங்கள மக்கள் 4 பேரும் உள்வாங்கப்பட்டனர். மேலும் குறிப்பிட்ட பிரதேசத்தினது இடங்களை அவதானித்தன் மூலமாக 60 வினாக் கொத்துக்கள் பயன்படுத்தியும் தகவல் திரட்டப்பட்டதுடன் வினாக்கொத்து மாதிரிகளை தெரிவு செய்யும் முறைகளில் எழுமாற்று மாதிரி நுட்ப முறை பயன்படுத்தப்பட்டது.

இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்பு முறையில் குறிப்பிட்ட சம்பவம் தொடர்பாக எழுதப்பட்ட சஞ்சிகைகள், பத்திரிகைகளில் வெளியான விமர்சனக் கட்டுரைகள், பொலிஸ் அலுவலகத்தின் பதிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட வழக்கு தொடர்பான தகவல்கள், மற்றும் இணையத்தளங்களிலிருந்து பெறப்பட்ட தகவல்களும் பயன்படுத்தப்பட்டன.

மேற்கூறப்பட்டவாறு திரட்டப்பட்ட தகவல்களில் எண்கள், புள்ளி விபரவியல், வினாக் கொத்து போன்றவற்றை MS EXCEL மென்பொருள்களை பயன்படுத்தி எண்ணளவுசார் பகுப்பாய்வு முறை மூலமும் ஏனைய தகவல்கள் பண்புசார் பகுப்பாய்வு முறை மூலமும் பகுப்பாய்வு செய்து ஆய்விற்கான தரவுகள் விளக்கப்பட்டன.

## 6.0 ஆய்வுப் பிரதேசம்

இவ் ஆய்வுக்கான ஆய்வுப்பிரதேசமாக காணப்படுவது இலங்கையின் மத்திய மாகாணத்தின் கண்டிமாவட்டத்தின் குண்டசால மற்றும் தெல்தெனிய பிரதேச செயலகங்களை மையமாகக் கொண்டே இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட பிரதேசங்களான அம்பல, தெல்தெனிய, திகன, கெங்கெல்ல, குண்டசால, நதரன்பொத, கும்புகந்துர, தென்னகும்பர, பூஜபிட்டிய, ஹரிஸ்பட்டுவ மற்றும் குருண்டுகொல்ல போன்ற பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வுப் பிரதேசங்களாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 7.0 கலந்துரையாடலும் பகுப்பாய்வும்

### 7.1 கண்டி திகன வன்முறை தோற்றப் பின்னணி

இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் 2018 பெப்ரவரி 10ம் திகதி இடம்பெற்றது. இந்த தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களின் கட்சி அதிக ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. அது மட்டுமல்லாமல் தற்போதைய இலங்கையின் ஜனாதிபதி ஒரு கட்சியாகவும், பிரதமர் ஒரு கட்சியாகவும், பாராளுமன்ற உறுப்பினர்கள் வேறு கட்சிகளின் கூட்டாகவும், உள்ளூராட்சி சபை மற்றுமொரு கட்சியாகவும் பரிணாமம் பெற்றது. இந்த நிலையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களது கட்சியின் உள்ளூராட்சிமன்ற வெற்றியானது தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்திற்கு பாரிய சவாலாக அமைந்தது. மறுபுறமாக தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்திற்கு வாக்களித்த சிறுபான்மையின மக்களுக்கு மீண்டும் இனவாதம் தலைதூக்கலாம் என்ற அச்ச உணர்வை ஏற்படுத்தியது. இவ்வாறான சூழ்நிலையில் கடந்த 2018 பெப்ரவரி 26ம் திகதி இலங்கையில் முஸ்லிம்கள் அதிகமாக வாழுகின்ற அம்பாறை மாவட்டத்தில் இனவாதக் கும்பலினால் அம்பாறை நகரில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இத்தாக்குதலானது அம்பாறையில் ஒரு முஸ்லிம் வர்த்தகர், தனது கொத்து ரொட்டியில் ஆண்மை நீக்க மாத்திரை பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் வதந்தி பரப்பப்பட்டு கடை உரிமையாளர் தாக்கப்பட்டதுடன் அம்பாறை ஜும்மா பள்ளிவாசல் தாக்கப்பட்டது. மேலும் அருகில் இருந்த முஸ்லிம் வர்த்தக நிலையங்கள் சேதமாக்கப்பட்டன. 500 மீற்றர் தூரத்தில் காவல் நிலையம் இருந்தும் சுமார் 1½ மணி நேரத்திற்குப் பின்னரே காவல்துறையினர் உரிய இடத்திற்கு சமூகம் அளித்தனர். இனவாதிகள் பேருந்துகளிலும், மோட்டார் வாகனங்களிலும் வருகை தந்து தாக்குதல்களை நடாத்தினர். தாக்குதலானது நடைபெற்றதன் பிற்பாடு வருகை தந்த காவல்துறையினர் தாக்குதலை மேற்கொண்டவர்களுக்கு சாதகமாகவே செயற்பட்டனர் (www.vaaramanjari.lk.2018/03/11/ஆசிரியர்-தலையங்கம்/கண்டிக்கலவரம்-2018).

இந்த சூழ்நிலையில் கடந்த 2018 பெப்ரவரி 21ம் திகதி முஸ்லிம் ஒருவரின் வாகனம் சிங்கள சகோதரர் ஒருவரின் வாகனத்துடன் விபத்துக்குள்ளாகின்றது. இருவரும் மன்னிப்புக் கேட்டுவிட்டுச் செல்கின்றனர். எனினும் அங்கிருந்த சில சிங்கள சகோதரர்கள் சேர்ந்து அவரைத் தாக்குகின்றனர். அவர் தப்பிப்பதற்காக ஒரு முஸ்லிம் கடைக்குள் நுழைகின்ற போது அந்தக்கடையானது தாக்கப்படுகின்றது. இதில் ஆறு பேர் கைது செய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்து 2018 பெப்ரவரி 22ம் திகதி இரவு சிங்கள சகோதரர் ஒருவர்

வாகனத்தினை திருப்பும்போது முஸ்லிம் ஒருவரின் முச்சக்கரவண்டியின் பக்கக் கண்ணாடி உடைகின்றது. இதன்காரணமாக இங்கு முறுகல் நிலை ஏற்படுகின்றது. அந்த முச்சக்கர வண்டி சாரதி உட்பட அதில் வந்த 3 முஸ்லிம் இளைஞர்களும் லொறி சாரதியினை தாக்குகின்றனர். இந்த தாக்குதலானது சாதாரண தாக்குதலாக கருதப்பட்டதுடன் அருகில் இருந்த ஒளிப்பதிவு கமராவில் பதியப்படுகின்றது. முஸ்லிம் இளைஞர்களின் செயற்பாடானது நிச்சயமாகக் கண்டிக்கத்தக்கதும், தண்டிக்கத்தக்கதுமாக இருக்கின்ற போதிலும் அதற்கு முதல் நாள் நடந்த சம்பவம் இந்த இளைஞர்களை தூண்டி விட்டதாக கூறப்படுகின்றது (வீரகேசரி, 10.03.2018, 13).

சமாதானமாக இருந்த இந்த சூழ்நிலையினை இனவாத சக்திகள் மற்றும் சில மதத்தலைமைகள் நிலை குழைய வைத்து ஒன்றிணைந்து பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சித்தனர். இதன் விளைவாகத்தான் திகன வன்முறையானது அரங்கேற்றப்பட்டது. இந்த நிலையில் காவல் துறை தரப்பினர் கடைகளையும் பள்ளிவாசல்களையும் மூடிவிட்டு வீட்டிற்குள் இருக்கும் படியும் தாம் அவற்றினைப் பாதுகாப்பதாகவும் முஸ்லிம்களிடம் வாக்களித்தனர். இந்த வாக்குறுதியினை நம்பிய முஸ்லிம்கள் கடைகளை மூடுகின்றனர். அதனைத் தொடர்ந்து முஸ்லிம்களின் கடைகள் தீக்கிரையாக்கப்பட்டதுடன் வீடுகளும் பள்ளிவாசல்களும் எரிக்கப்பட்டன. பௌத்த சகோதரர்களுக்கு சொந்தமான கட்டிடங்களில் முஸ்லிம்கள் வியாபாரம் செய்து வந்ததால் அவ்வாறான கட்டிடங்கள் சேதமாக்கப்படாமல் தாக்குதல்கள் நன்கு திட்டமிட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது.

மேலும் தாக்குதல்களை மேற்கொண்டவர்கள் நன்கு பயிற்றப்பட்டவர்களாகவும், விவேகம் கொண்டவர்களாவும், தேர்ச்சி பெற்றவர்களாகவும் இருந்ததாக கூறப்படுகின்றது. இவர்கள் எப்போது, எங்கு, எப்படி தாக்குதல்களை மேற்கொள்ள வேண்டும் என்பது பற்றி தீர்மானம் மேற்கொண்டு அது பற்றிய முழுமையான பயிற்சியினையும், தேர்ச்சியினையும் பெற்றுவிட்டனர். முஸ்லிம்கள் தற்பாதுகாப்புக்காக எதிர்த்தாக்குதல்களை மேற்கொண்ட பகுதிகளில் மாத்திரம் வன்முறையானது குறைவாக பதிவாகியுள்ளமையினைக் காணக்கூடியதாக இருந்தது. அதேபோன்று இந்த தாக்குதல் திட்டத்தினை திட்டவட்டமான முறையில் ஆய்வு செய்கின்ற போது இவை திடீரென ஏற்படுத்தப்பட்டதொன்றல்ல என்பது தெளிவாக வெளிப்படுத்தப்படுகின்றது. முஸ்லிம் இளைஞர்களால் தாக்கப்பட்ட சிங்கள சதோரரை திட்டமிட்டு கொலை செய்து விட்டு அவர்களின் சொத்துக்களையும் சூரையாடிவிட்டு தமது நோக்கங்கள் நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டதாக ஆய்வின் ஊடாக தெரியவருகின்றது.

திகன வன்முறைக்குப் பின்னணியாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இருப்பதாகவும், தற்போதைய நல்லாட்சி இருப்பதாகவும் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றது. மேலும் எல்லாக்கட்சியிலும் உள்ள இனவாத அரசியல்வாதிகள் மற்றும் இனவாதிகள் அனைவருக்கும் இதில் பங்கிருப்பதாகவும் கூறப்படுகின்றது. அதேவேளை இலங்கையின் தற்போதய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனா அவர்கள் இந்த கலவரம் நடப்பதற்கு ஒரு சில தினங்களுக்கு முன்னர் வன்முறையினை முன்னின்று நடாத்திய மட்டக்களப்பு மங்களாராம விகாராதிபதி சுமனரத்ன தேரரை சந்தித்து ஆசியினைப் பெற்றுக்கொண்டதனையும், கலவரம் முடிந்த பின்னர் ஜப்பானில் ஜனாதிபதியின் கூட்டத்தில் மற்றுமொரு இனவாத மதத்தலைவரான பொதுபல சேனா அமைப்பின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞனசார தேரர் பங்கு கொண்டதையும் நோக்குகின்ற போது சந்தேகத்தினை மேலும் வலுவடையச் செய்திருந்தது. அண்மைக்காலமாக அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் அரசின் முக்கியமான புள்ளிகள் இந்த கலவரத்திற்குப் பின்னணியாக இருப்பதாக குறிப்பிட்டு வருகின்றனர்.

2018 மார்ச் 04ம் திகதி மெதமகநுவரவில் உள்ள எம்.கே.எம். ஸ்டோர் தீக்கிரையாக்கப்பட்டதுடன் திகனப் பகுதியில் அச்சுறுத்தல்களும், எச்சரிக்கைகளும் விடுக்கப்பட்டிருந்து. இந்த தாக்குதல்களுடன் தொடர்புபட்ட 24 பேர் தெல்தெனிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதோடு அனைத்து முஸ்லிம்களும் வீடுகள் மற்றும் கடைகளை விட்டு வெளியேறுமாறும் பொலிஸாரினை நம்புமாறும் கூறப்பட்டது. 2018 மார்ச்

05ம் திகதி மரணச்சடங்குகள் அம்பாலையில் இடம்பெற்றதுடன் 40 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள திகனப்பிரதேசம் வரை கூட்டமானது செறிவடைந்து காணப்பட்டது. பாரிய தாக்குதல்கள் முழுவதும் குண்டசாலை பிரதேசசபைக்குட்பட்டதாக காணப்பட்டது. வீடுகள் எரிக்கப்பட்டதுடன் இலங்கை இராணுவத்தினரால் தாக்குதல்கள் ஹிஜ்ராபுர பள்ளிவாசல் வரை நடைபெற்றது. 2018 மார்ச் 06ம் திகதி தாக்குதல்கள் மற்றும் எச்சரிக்கைகள் தென்னங்கும்புர மற்றும் கண்டியை மையமாகக் கொண்டது. மார்ச் 07ம் திகதி வன்முறையானது காலை 10 மணி தொடக்கம் இரவு 08 மணி வரை பூஜாப்பிட்டிய, ஹரிஸ்பத்துவ. அக்குறனை, யட்டிநுவர, தீகல, குருகொட, மல்வானஹின்ன போன்ற கண்டி மாவட்டத்தின் பல பகுதிகளில் வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டது. 2018 மார்ச் 08ம் திகதி திகன வன்முறையின் பிரதான சூத்திரதாரியான அமித்வீரசிங்க மற்றும் வன்முறையுடன் தொடர்புபட்ட 09 நபர்கள் பூஜாபிட்டிய பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்பட்டனர். இலங்கையின் ஜனாதிபதி மதத்தலைவர்களை சந்தித்து கண்டிப் பகுதியில் அமைதியினை பேனுமாறு வேண்டினார். 2018. மார்ச் 09 பிரதமர் பாதிக்கப்பட்ட பகுதிகளிற்கு விஜயத்தினை மேற்கொண்டிருந்தார். குறிப்பாக கெங்கெல்ல மற்றும் அக்குறனை ஆகிய இடங்களைப் பார்வையிட்டதுடன் நேரடியாக பாதிக்கப்பட்ட மக்களுக்காக நிவாரணங்களையும் வழங்கினார் (பஷால், 2018).

இந்த வன்முறை தொடர்பாக பொதுபலசேன அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞனசார தேரர் குறிப்பிடுகின்ற போது கண்டி திகன கலவரத்தில் கைது செய்யப்பட வேண்டிவர் அமித்வீரசிங்கவோ அல்லது இளைஞர்களோ அல்ல என்றும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவே கைது செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். ஏனெனில் வன்முறை இடம்பெற்றபோது இலங்கையின் சட்டம் ஒழுங்கு அமைச்சராக பிரதமரே பதவி வகித்திருக்கின்றார் எனக் குறிப்பிடுகின்றார். அரசாங்கத்தின் தவறுகளை மறைப்பதற்காகவே இளைஞர்களையும் அமித்வீரசிங்கவையும் கைது செய்ததாகவும் வன்முறையின் போது பொலிஸாரின் நடவடிக்கையானது வன்முறையினைக் கட்டுப்படுத்துவதாக அமைந்திருக்க வில்லை எனவும் எமது நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெறுகின்ற வன்முறைகளைக் கட்டுப்படுத்த எவ்வகையான திட்டங்களும் கிடையாது எனவும் தொடர்ச்சியாக குரோதத்துடனும் வைராக்கியத்துடனும் வாழ முடியாது எனவும் தமது கருத்தினை தெரிவித்திருந்தார் (விடிவெள்ளி, 27.03.2018, ப.1).

திகனக் கலவரத்தின் போது விசேட அதிரடிப்படையினைச் சேர்ந்தவர்கள் பள்ளிவசலில் இருந்த இரண்டு மதத்தலைவர்களான உலமாக்களை வெளியே இழுத்து வந்து தாக்கியதாகவும், அவர்களது கரங்களில் ஆயதங்களை திணித்து போட்டோவும் எடுத்ததாகவும் அந்த ஒளிப்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் பைஸர்முஸ்தபா குறிப்பிடுகின்றார். திகனப் பகுதிகளில் ஊரடங்குச் சட்டங்கள் அமுலில் இருந்த வேளையில் முஸ்லிம்களின் சொத்துக்கள் சூரையாடப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன. பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரம் சட்டத்தினை நிலைநிறுத்த தவறியுள்ளனர். முஸ்லிம் இளைஞர்களை வீட்டிற்குள் வைப்பதற்கே கண்டி மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றார்கள் (விடிவெள்ளி, 27.03.2018, ப.1).

### 7.2 வன்முறையினால் ஏற்பட்ட விளைவுகள்

இலங்கையானது வளர்ச்சி அடைந்து வருகின்ற நாடுகளில் ஒன்றாகவும் பிரிதொரு நாட்டின் உதவியுடன் செயற்படுகின்ற ஒரு நாடாகவும் காணப்படுகின்றது. இலங்கையின் அபிவிருத்தியில் பல்வேறு நாடுகளுக்கு தனித்துவமான வகிபாகம் காணப்படுகின்றது. சர்வதேச ரீதியாக பல்வேறு பொருளாதார உறவுகளை இராஜதந்திர அடிப்படையில் நிறைவேற்றி வருகின்றது. இலங்கையானது சுனாமி, சூறாவளி, நில அதிர்வு, மண்சரிவு போன்ற பல்வேறு இயற்கை அனர்த்தங்களின் மூலமாக பாதிப்புக்குள்ளாக்கப்பட்டு இன்னும் பூரணமான வளர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளவில்லை. அதேபோன்று கடந்த 30 வருட காலமாக இலங்கையில் இடம்பெற்ற யுத்தமானது பாரிய விளைவுகளையும், உயிர்ச் சேதங்களையும் ஏற்படுத்தி இருக்கின்றது. இன்று வரைக்கும் இந்த யுத்தத்தால் ஏற்பட்ட விளைவுகளை பூரணமாக நிவரத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. யுத்தம்

முடிவடைந்த பின்னர் மதவாத சிந்தனைகளைக் கொண்ட அமைப்புக்களின் உருவாக்கம் மற்றும் தீவிரவாத சிந்தனைகள் காரணமாக சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றது. கடந்த ஆட்சியில் அளுத்கம கலவரம் இந்த நாட்டில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தி இருக்கின்றது. தற்போதய நல்லாட்சி அரசாங்கத்தில் காலி ஜிந்தோட்டை, அம்பாறை வன்முறை மற்றும் கண்டி திகன வன்முறை என்பன இந்த நாட்டின் பொருளாதரத்தில் பின்னடைவினை ஏற்படுத்தி உள்ளதுடன் பல்வேறு சேதங்களையும் உருவாக்கி உள்ளது. அந்த வகையில் கண்டி திகன வன்முறையினால் ஏற்பட்ட சேத விபரம் பின்வருமாறு சுட்டிக்காட்டப்படுகின்றது.

**தெல்தெனியா பிரதேச செலகத்திற்கு உட்பட்ட பகுதியில் இருந்தான சேத விபரம்**

| **தொ.இல** | **விபரம்** | **எண்ணிக்கை அல்லது பெறுமதி** |
|---|---|---|
| 01 | வியாபர நிலையம் (1) | 4500.00 |
| 02 | வியாபர நிலையம் (2) | 25000.00 |
| 03 | வியாபர நிலையம் (3) | 2680000.00 |
| 04 | வியாபர நிலையம்(4) | 115000.00 |
| 05 | வியாபர நிலையம் (5) | 37750.00 |
| | **மொத்தம்** | **2862250** |
| | உயிரிழப்பு | 01 |

(மூலம்: தெல்தெனியா பிரதேச செயலகம், 2019)

**குண்டசாலை பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியில் ஏற்பட்ட சேத விபரம்**

| **தொ.இல** | **விபரம்** | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 01 | வீடுகள் | 104 |
| 02 | வியாபார நிலையங்கள் | 122 |
| 03 | பள்ளிவாசல் | 04 |
| 04 | வாகனங்கள் | 16 |
| 05 | உயிரிழப்பு | 01 |
| | **மொத்தம்** | **247** |

(மூலம்: குண்டசாலை பிரதேச செயலகம், 2019)

மேற்படி தகவல்களின் ஊடாக கண்டி திகன வன்முறையின் பிரதான விளைவுகள் தொடர்பாக பல தகவல்கள் பெற்றுக் கொள்ளப்படுகின்றது. குறிப்பாக இந்தக் கலவரத்தின் மூலமாக பல்வேறு சிக்கல் நிலை உருவாகியுயுள்ளது. சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிட்ட அடிப்படையில் இன வன்முறையானது மேற்கொள்ளப்பட்டிருப்பதனை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது. முஸ்லிம்களுக்கு சொந்தமான கடைகள் ஏற்கனவே

அடையளம் காணப்பட்டதன் பின்னர்தான் மோதலானது இடம்பெற்றது. குறிப்பிட்ட பகுதியில் ஒன்றாக வாழ்ந்து இன நல்லுறவினை ஏற்படுத்த வேண்டிய குறிப்பிட்ட சில சிங்கள மக்கள் இவ்வாறான கலவரங்களுக்கு பின்னணியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். மேலும் அரசியல் தலைவர்கள் மற்றும் மதத்தலைவர்கள் கண்டி திகன வன்முறைக்கு மறைமுகமாகவும் நேரடியாகவும் தாக்கத்தினை செலுத்தி இருப்பதும் குறிப்பிடதக்கது. அவசர கால சட்டம் மற்றும் ஊரடங்கு சட்டம் நாடு பூராகவும் அமுல்படுத்தப்பட்டதுடன் அவ்வாறான சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களின் சொத்துக்கள் பல சேதமாக்கப்பட்டன. மனித உயிர்களை குறிவைத்து தாக்குவதை விட பொருளாதார ரீதியாக மக்களை பலவீனப்படுத்துவதையே பிரதான இலக்காகக் கொண்டு சொத்துக்கள் பல சேதமாக்கப்பட்டமையினைக் குறிப்பிடலாம்.

**7.3 கண்டி திகன வன்முறையின் பின்னரான நிலைப்பாடு**

இலங்கையில் யுத்த வெற்றிக்குப் பின்னர் கடந்த 2014 சிறுபான்மை முஸ்லிம் சமூகத்திற்கு எதிராக கறுப்பு ஜுன் என அழைக்கப்படுகின்ற அளுத்கம கலவரம் நன்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்டு பல்வேறு சொத்துக்கள் குறிவைத்து தாக்கப்பட்டதை மீண்டும் வெளிச்சத்திற்கு கொண்டு வந்த ஒரு கலவரமாக கண்டி திகன வன்முறை காணப்படுகின்றது. இந்த கண்டி திகன வன்முறையானது முடிவடைந்ததன் பின்னர் அந்தப் பகுதியில் வாழ்கின்ற சிங்கள, முஸ்லிம் உறவு நிலைகளில் பாரிய தாக்கம் ஏற்பட்டது. கண்டி திகன வன்முறையின் மூலமாக முஸ்லிம்களின் பொருளாதாரம் திட்டமிட்டு சேதமாக்கப்பட்டதுடன், மக்கள் மிகவும் சொல்லெண்ணாத்துயரத்தில் காணப்பட்டனர். தோடர்ச்சியாக மக்கள் மத்தியில்பதற்றமான மனோநிலையே காணப்பட்டது. பல்வேறு பிரதேசங்களில் நாடளாவிய ரீதியில் கலவரத்திற்கு பின்னர் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை அந்தப் பகுதி மக்களுடைய மனதை மேலும் அச்சத்திற்குட்படுத்தியது. அரசியல் ரீதியாக பல்வேறு மாற்றங்கள் இடம்பெற்ற சூழ்நிலையில் தமக்கு எந்த அரசாங்கம் வந்தாலும் பாதுகாப்பு இல்லை என்ற எண்ணம் பல தரப்புக்களாலும் வெளியிடப்பட்டமையினை சமூக வலைத் தளங்களில் காணக்கூடியதாக உள்ளது. திகன வன்முறையின் பின்னர் திருகோணாமலை சன்முகா வித்தியால பர்தா விவகாரம், முன்னாள் இராஜங்க அமைச்சரும் தற்போயை கல்வி இராஜங்க அமைச்சருமான விஜேகலா மஹேஸ்வரியின் கருத்துக்கள், மாவனல்லை சிலை உடைப்பு விகாரம் மற்றும் தற்போத தமிழ் மக்கள் சிங்கள இனவாத சக்திகளின் செயற்பாடுகள் அந்தப் பகுதி மக்களின் மனோநிலையில் இன்று கூட அச்ச நிலையினை காணக்கூடியதாக இருக்கின்றது.

கண்டி திகன வன்முறையானது அப்போதய காலப்பகுதியில் பதற்ற நிலையினை ஏற்படுத்தி இருந்தாலும் சமகாலத்தில் சுமுகமான உறவு நிலை காணப்படுவதாக தெல்தெனிய பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி குறிப்பிடுகின்றார். மேலும் அவர் தெல்தெனிய பொலிஸ் நிலையத்திற்குட்பட்ட சிங்கள சகோதரரான குமாரசிங்க குடும்பத்திற்கு அரசாங்கத்தினால் பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டதாகவும் தற்போது பாதுகாப்பு நடவடிக்கை மிகச் சிறப்பான முறையில் காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

அதேபான்று தெல்தெனிய பிரதேச செயலாளர் அவர்கள் குறிப்பிடுகையில் தற்போது பிரச்சினைகளுக்கான காரணிகள் கண்டறியப்பட்டு அதற்கான தீர்வுகள் முழுமையாக வழங்கப்பட்டுள்ளதாகவும் எதிர்காலத்தில் அவ்வாறான பிரச்சினைகள் ஏற்படாத வண்ணம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர்குறிப்பிட்டார். குறிப்பாக இன, மத நல்லுறவினைப் பேணிப்பாதுகாப்புவதற்காக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பிரதேச செயலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். அதேபோன்று திகன வன்முறையின் போது பௌத்த மதகுரு ஒருவர் பள்ளிவாசல் மற்றும் முஸ்லிம் கிராமத்தினையும் சிங்கள இளைஞர்களின் உதவியுடன் பாதுகாத்த சம்பவத்தினையும் குறிப்பிட்டிருந்தார். பாதிப்புக்குள்ளான சகல மக்களுக்கும் நிவாரணம் வழங்கியதாகவும் தற்போது வன்முறை இடம்பெற்ற பகுதிகளில் சுமுகமான நிலையில் மக்கள் செயற்படுவதாகவும் குறிப்பிட்டார்.


**7.4 பகுப்பாய்வும் பெறுபேறுகளும்**

நல்லாட்சி அரசாங்கத்தில் சிறுபான்மை முஸ்லிம்களின் நிலைப்பாடு : திகன கலவரத்தை மையப்படுத்திய ஆய்வு என்ற தலைப்பிலான இவ்வாய்வின் இத்தலைப்பானது பகுப்பாய்வு மற்றும் பெறுபேறுகள் தொடர்பானது. இங்கு சுயவிபரம் குறித்த பகுப்பாய்வு, காரணங்கள் தொடர்பான பகுப்பாய்வு, தடைகள் குறித்த பகுப்பாய்வு தொடர்பான பெறுபேறுகளை முன்வைப்பதாகக் காணப்படுகின்றது.

- **திகன வன்முறை தொடர்பான பகுப்பாய்வு**

**இலங்கையின் முன்னைய அரசாங்கத்தை விட தற்போதய நல்லாட்சி அரசாங்கத்தில் இன ரீதியான வன்முறைகள் பற்றிய பகுப்பாய்வு**


இலங்கையின் நல்லாட்சி அரசாங்கத்தில் முன்னைய ஆட்சியினை விட இன ரீதியான வன்முறைகள் அதிகரித்து வருகின்றமையினை ஏற்றுக் கொள்வதற்கான பகுப்பாய்வில் இருந்து பெறப்பட்ட தகவலின் படி 42% வீதமானவர்கள் இரண்டு ஆட்சியிலும் சமநிலையில் உள்ளதாகக் குறிப்பிடுகினர். மேலும் 30% வீதமானவர்கள் அதிகரித்துள்ளதாகவும் 20% வீதமானவர்கள் அதிரிக்கவில்லை என்றும் குறிப்பிட்டுள்ள அதேநேரம் 8% வீதமானவர்கள் இது தொடர்பாக கருத்துக்களை கூற முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். இதனைக் கீழ்வரும் படத்தில் காணலாம்.




மூலம், கள ஆய்வு, 2019

**திகன வன்முறையானது சிறுபான்மை முஸ்லிம்களின் எதனை மையமாக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது தொடர்பான கணிப்பு.**

மாதிரி எடுப்பின் மூலமாக தெரிவு செய்யப்பட்ட மாதிரிக்கு ஏற்ப வழங்கப்பட்ட வினாக்கொத்துக்களின் பிரகாரம் திகன வன்முறையானது அரசியல், சமூக, பொருளாதார, மொழி காரணிகளில் எதனை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்படுகின்றது என்ற பகுப்பாய்விற்கு கீழ் வரும் படவரைபின் ஊடாக மக்கள் எவ்வாறான நிலைமையில் உள்ளனர் என்பதை அறிந்து கொள்ளலாம்.





மூலம், கள ஆய்வு, 2019

மேற்படி வரைபடத்தின் மூலமாக திகனக் கலவரமானது முஸ்லிம்களின் பொருளாதாரத்தினை மையமாக் கொண்டுதான் தாக்கப்படுகின்றது என்ற 67% வீதமான மக்கள் கருத்தினை காணலாம். மேலும் சமயத்தை மையப்படுத்தி இந்த வன்முறையானது மேற்கொள்ளப்பட்டதாக 12% வீதமானவர்களும், மொழியினை மையப்படுத்தியதாக இந்த வன்முறையானது மேற்கொள்ளப்படுவதாக 6% வீதமானவர்கள் குறிப்பிடுவதோடு 2% வீதமானவர்கள் அரசியலை மையப்படுத்தி இவ்வாறான வன்முறைகள் மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடுகின்றனர்.

**வன்முறையின் போது அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய மக்களின் திருப்தி நிலையை அறிவதற்கான பகுப்பாய்வு**

திகன கலவரத்தின் போது இலங்கையின் அரசாங்கமானது முன்னெடுத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் எந்தளவு திருப்தியினை ஏற்படுத்தியது தொடர்பான வினாவினை விபரிப்பதாக பின்வரும் வரிப்படம் அமைகின்றது.





மூலம், கள ஆய்வு, 2019

மேற்படி தகவலின் படி திகன வன்முறையின் போது அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் பெரும்பாலான மக்களுக்கு திருப்தியில்லாத நிலையினைக் காணக்கூடியதாக உள்ளது. என்னால் ஆய்வுக்குட்படுத்திய 60 வினாக்கொத்தில் 30பேர்

இந்த கலவரத்தில் பாதுகாப்பு பிரிவினரின் செயற்பாடுகள் திருப்தியில்லை என்பதைக் குறிப்பிடுகின்றனர். மேலும் 10பேர் ஓரளவு திருப்தி உள்ளதாகவும், 5 பேர் மிகத்திருப்தியாக உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ள அதேவேளை 15 பேர் இது தொடர்பாக கூற முடியாது என்ற நிலையினையும் வெளிப்படுத்தியதை காணலாம்.

**திகன வன்முறையில் பாதிப்புக்குள்ளான மக்களுக்காக அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட இழப்பீடுகள் எந்தளவிற்கு மக்கள் மத்தியில் திருப்தியானதான உள்ளது என்பதை கண்டறிவதற்கான பகுப்பாய்வு**

திகன வன்முறையானது இந்த நாட்டில் ஏற்படுத்திய சேதங்களுக்கும், அந்த பகுதி மக்கள் அதனால் அடைந்த பாதிப்புக்களுக்கும் அரசாங்கமானது வழங்கிய உதவிகள் திருப்தியானதாக இருந்ததா என்பதைக் கண்டறிவதற்கான பகுப்பாய்வின் வரைபடம் கீழே காட்டப்பட்டுள்ளது.





மூலம், கள ஆய்வு, 2019

மேற்படி வரைபடத்தின் ஊடாக திகன வன்முறையில் அரசாங்கத்தின் மூலமாக மக்களுக்கு வழங்கிய இழப்பீடுகள் திருப்தியில்லை என்பதை 43% வீதமான மக்கள் குறிப்பிடுகின்றமையினைக் காணக்கூடியதாக உள்ளது. அதேபோன்று 20% வீதமான மக்கள் ஓரளவு திருப்தியாக உள்ளதாகவும் மிகுதி 3% வீதத்திற்கும் குறைவானவர்கள் திருப்தியாக உள்ளதாகவும் குறிப்பிடுகின்றனர்.

**திகன கலவரத்தில் முஸ்லிம் அரசியல் தலைவர்களின் செயற்பாட்டினை அடையாளப்படுத்தி அதன் தெளிவினைப் பெறுவதற்கான பகுப்பாய்வு**

திகன கலவரத்தின் போது அந்த மக்களை பாதுகாப்பதற்காக வேண்டியும் அதனைத்தொடர்ந்து வந்த காலப்பகுதியில் சிறுபான்மை முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்காகவும் அவர்களால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எந்தளவிற்கு மக்கள் மனதில் காணப்படுகின்றது என்பதை கண்டறிவதற்கான பகுப்பாய்வின் வரைபடம் கீழே காட்டப்பட்டுள்ளது.





மூலம், கள ஆய்வு, 2019

திகனக் கலவரத்தில் முஸ்லிம் அரசியல் தலைவர்களின் செயற்பாடு தொடர்பாகவும் மக்கள் அதிருப்தியில் உள்ளமையினை மேலுள்ள வரைபடத்தின் ஊடாகக் காணக்கூடியதாக உள்ளது. ஆய்வுக்குட்படுத்திய 60 பேரில் 32 பேர் இவர்களுடைய யெற்பாடு திருப்தியில்லை என்றும் ஓரளவு திருப்தியாக 24பேரும் 5பேர் திருப்தி நிலையிலும் காணப்பட்டதுடன் ஒருவர் மாத்திரம் மிகத்திருப்தி அடைவதாக குறிப்பிட்டிருந்ததையும் காணக்கூடியதாக உள்ளது.

**நல்லாட்சி அரசாங்கமானது முஸ்லிம்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக திகன கலவரத்தின் பின்னர் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் திருப்தியானதாக இருக்கின்றதா என்பதை கண்டறிவதற்காதன பகுப்பாய்வு**

இலங்கையின் தற்போதய தேசிய நல்லாட்சி அரசாங்கமானது சிறுபான்மை முஸ்லிம்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் மக்களுக்கு நியாயமான முறையில் இருக்கின்றதா என்பதையும் மக்களின் மனோநிலை பற்றியும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் வெளிப்பாட்டிற்கான வரைபடம் கீழே காட்டப்படுகின்றது.





மூலம், கள ஆய்வு, 2019

கண்டி திகன கலவரத்தின் பின்னர் அரசாங்கத்தின் ஊடாக முஸ்லிம்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக மேற்கொள்னப்படுகின்ற நடவடிக்கைகள் 53% வீதமான மக்களுக்கு

திருப்தியில்லாத நிலையிலும், 34% வீதமான மக்கள் ஓரளவு திருப்தி நிலையிலும், 10% வீதமான மக்கள் திருப்தி நிலையிலும் காணப்பட்டதுடன் இரண்டு வீதமானர்கள் பூரண திருப்தியுடனும் காணப்பட்டதை மேலுள்ள வரிப்படம் மூலமாக காணக்கூடியதாக உள்ளது.

**தற்போது திகன கலவரம் இடம்பெற்ற பகுதிகளில் சிங்கள முஸ்லிம் உறவு நிலை எவ்வாறு காணப்படுகின்றது என்பதை கண்டறிவதற்கான பகுப்பாய்வு**

திகனக் கலவரமானது நடைபெற்ற பகுதிகளில் தற்போது சிங்கள முஸ்லிம் உறவு நிலை எவ்வாறு காணப்படுகின்றது என்பதையும் அது பற்றி மக்கள் எவ்வகையான நிலைப்பாட்டில் உள்ளார்கள் என்பது தொடர்பான ஆய்வின் பகுப்பாய்வு பின்வருமாறு காட்டப்படுகின்றது.




மூலம், கள ஆய்வு, 2019

திகன கலவரமானது இடம்பெற்ற பகுதிகளில் தற்போது சிங்கள முஸ்லிம் உறவு நிலையானது திருப்தி இல்லாத நிலையிலும், ஓரளவு திருப்தியான நிலையிலும் இருப்பதை மேலுள்ள வரைபடத்தின் மூலமாக காணக்கூடியதாக உள்ளது. 32பேர் ஓரளவு திருப்தி நிலையிலும் 14 பேர் திருப்தியில்லாத நிலையிலும் காணப்படுகின்றமையினை அவதானிக்கலாம்.

## 8.0 முடிவுரைன

“திகன வன்முறையும் அதன் விளைவுகளும் : இலங்கையின் அனுபவங்கள்” எனும் இவ்வாய்வு முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவு மூலங்களிருந்து தரவுகள் பெறப்பட்டு மேற்கொள்ளப்பட்டது. அந்த வகையில் முதலாம் நிலைத்தரவு மூலங்களான அவதானம், நேர்காணல் மற்றும் வினாக்கொத்தின் மூலமாக தகவல் பெறப்பட்டு பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டன. இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளங்கள் மற்றும் பிரதேச செயலக அறிக்கைகள் மூலம் ஆய்விற்குத் தேவையான தகவல்கள் பெறப்பட்டன.

இவ்வாய்வின் நோக்கங்களைப் பொறுத்த வரை இலங்கையில் நல்லாட்சி அரசாங்கத்தில் சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிராக கண்டி திகன கலவரமானது மேற்கொள்ளப்பட்டமைக்கான காரணிகளைக் கண்டறிதல், கண்டி திகன கலவரத்தினை எதிர்கொள்வதில் முஸ்லிம் அரசியல் தலைமைகளின் பங்களிப்புக்களை கண்டறிதல், திகன கலவரத்திற்கு பின்னர் சிறுபான்மை முஸ்லிம்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக அரசாங்கத்தால் முனனெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளைக் கண்டறிதல் மற்றும் தற்போது சிங்கள முஸ்லிம் உறவு நிலை திகனப் பகுதியில் எவ்வாறு காணப்படுகின்றது என்பதன் தெளிவினைப் பெறல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது.

அந்த வகையில் இவ்வாய்வில் மேற்கூறப்பட்ட அனைத்து விடயங்களும் பூரணப்படுத்தப்பட்டுள்ளது.

இக்கலவரத்தினை மையமாக வைத்து பார்க்கும் போது பிரிவினையை ஏற்படுத்த விரும்பும் இயக்கங்கள் மற்றும் தனி நபர் போன்றோரின் சுய இலாபத்திற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாக கருதப்படுகின்றது. இக்கலவரத்தினை ஒட்டு மொத்த சிங்கள மக்களும் ஏற்றுக் கொண்டதாக தென்பட வில்லை என்பதை மஹாநாயக்க தேரர்களின் கருத்துக்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் கண்டனங்கள் சில பௌத்த பிக்குகள் கலவரத்தின் போது முஸ்லிம்களைப் பாதுகாத்தமை போன்ற செயற்பாடுகளின் ஊடாக அறியக்கூடியதாக உள்ளது.

ஹலால் சான்றிதல் வழங்குதல், ஹபாயா ஆடை முறை, வங்கி முறைகளில் ஷரியா நடைமுறை காணப்படுதல், விவாகவிவாகரத்துச் சட்டம் போன்ற பிரத்தியோகமான சலுகைகள் வழங்கப்பட்டமையானது பௌத்த மேலாக்கத்தினை மேலோங்கச் செய்வதற்கு முஸ்லிம்களுக்கு மேலே வழங்கப்பட்ட சலுகைகள் காரணமாக அமைகின்றன. இவற்றின் ஊடாக ஆய்வின் கருதுகோள் நிருபிக்கப்பட்டுள்ளது. மேலும் கண்டி திகன வன்முறையின் பின்னரான நிலைப்பாடு, திகன வன்முறைக்குப் பின்னரான சிங்கள முஸ்லிம் உறவு நிலை, இன நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள், திகன வன்முறை தொடர்பாக மஹாசொன் பலகாய அமைப்பின் செல்வாக்கும் அதன் செயற்பாட்டு நிலைமையும், சிறுபான்மை முஸ்லிம்களுக்கு எதிராக பௌத்த பேரினவாத இயக்கங்கள் மேற்கொள்ளும் வன்முறைகளுக்கான காரணங்கள், திகன கலவரம் தொடர்பாக அரசியல் தலைவர்களின் நிலை, திகன கலவரமானது உள்நாட்டு ரீதியில் ஏற்படுத்திய தாக்கம், திகனக் கலவரத்தின் பின்னர் இனநல்லுறைக் கட்டியெழுப்புவதில் உள்ள தடைகள் போன்ற பல விடயங்களின் ஊடாக இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 9.0 பரிந்துரைகள்

இந்த ஆய்வின் போது கள விஜயம், நேர்காணல், வினாக்கொத்து ஆகியவற்றின் ஊடாக நான் பெற்றுக் கொண்ட அனுபவங்களின் அடிப்படையில் இன்னுமொரு இனக்கலவரம் முஸ்லிம் சிங்கள மக்களுக்கு மத்தியில் இடம்பெறாமல் இருப்பதற்கு பின்வரும் ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன.

- ❖ அரசியல் கட்சிகள் இனவாத அரசியலை கைவிட்டு இனவாதத்தை மையமாக வைத்து வாக்குப் பெறும் நிலைமைகளை மாற்றி பொது நலனை அடிப்படையாக வைத்து மூவினங்களும் சமாதனமாகவும், சந்தோஷமாகவும் வாழக்கூடிய வகையில் செயற்பட வேண்டும். அதற்காக அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து இனவாதக் கட்சிகள் தோற்றம் பெறுவதை அரசியல் அமைப்பின் ஊடாக தடை செய்ய வேண்டும்.
- ❖ மேலும் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் ஆட்சியினை காப்பாற்றுவதற்காக எவ்வாறு முஸ்லிம் தலைவர்கள் ஒன்றிணைந்தார்களோ அதேபோன்று முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக முஸ்லிம் தலைமைத்துவங்கள் ஒரே குடையின் கீழ் ஒன்றிணைய வேண்டும். அப்போதுதான் முஸ்லிம்களின் குரல் ஒன்றாக ஒலிக்கும் போது அது அரசாங்கத்திற்கு பாரியதொரு அழுத்தத்தினை ஏற்படுத்தும்.
- ❖ இனவாதத்தை தூண்டக்கூடிய அமைப்புக்களான சிங்களராவய, பொதுபலசேன, சிங்களே, மஹாசொன்பலகாய போன்ற பௌத்த அமைப்புக்களை முற்றுமுழுதாக தடைசெய்ய வேண்டும். ஏனெனில் அண்மைக்கால இலங்கையின் வரலாற்றை நோக்கும் போது இனவாதத்தை வளர்ப்பதில் மேற்கூறப்பட்ட அமைப்புக்களின் பங்களிப்பு அளப்பரியதாக உள்ளது.

- ❖ இனவாத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த மற்றும் முகாமைத்துவம் செய்ய விஷேடமாக ஆணைக்குழுக்களை நிறுவி அவ் ஆணைக்குழுக்களில் மும்மதத்தை சேர்ந்தவர்களையும் உள்வாங்க வேண்டும். இதன் ஊடாக பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்துக் கொள்ள முடியும். இதில் அரசியல் தலையீடு முற்றாகத் தடைசெய்யப்பட வேண்டும்.
- ❖ முப்படைகளுக்கு ஆட்களைச் சேர்க்கும் போது கட்டாய சேவை அடிப்படையில் முஸ்லிம்கள் மற்றும் தமிழர்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் திகன கலவரத்தில் பெறப்பட்ட படிப்பினைகளின் அடிப்படையில் சிங்கள படைவீரர்கள் தங்களைத்தாக்கினார்கள் என அப்பாவி பொதுமக்கள் வாக்கு மூலம் வழங்கினர். எனவே எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளில் இருந்து தவிர்ந்து கொள்வதற்காக முப்படைகளில் முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும்.
- ❖ பல்லின மக்கள் வாழும் நாட்டின் அரசியல் யாப்பில் பௌத்த மதத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டமையானது ஏனைய இனங்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்த ஒரு ஏற்பாடாகும். ஏனெனில் மற்றைய மதங்கள் புறக்கணிக்கப்படுவதற்கு இது ஒரு காரணமாகும். அனைத்துக் கட்சி தலைவர்களும் ஒரு பொதுவான உடன்பாட்டிற்கு வந்து இந்த ஏற்பாட்டில் ஒரு திருத்தத்தினை கொண்டுவர வேண்டும்.
- ❖ சிங்கள, தமிழ் மொழிகள் அரசகரும மொழிகளாக அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்ட போதிலும் சிங்கள மொழிக்கு அரச அலுவலகங்களில் அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டு தமிழ் மொழி புறக்கணிக்கப்படுகின்றமை பாரியதொரு குற்றச்சாட்டாகும். இதனைத் தவிர்த்து அரசாங்கமானது இறுக்கமான நடவடிக்கைகளின் மூலம் தமிழ் மொழியினையும் சமனாகப்பேண வேண்டும்.
- ❖ சோல்பரி யாப்பில் காணப்பட்டது போன்று சிறுபான்மையினோர் காப்பீடு என்கின்ற ஒரு அத்தியாயம் அரசியல் யாப்பினுள் உள்வாங்கப்பட வேண்டும். அதன் மூலமாக சிறுபான்மையினர்களின் எதிர்கால இருப்பு உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும்.
- ❖ வேலை வாயப்பு, பல்கலைக்கழக அனுமதி, அரசியல் பிரதிநிதிகளின் எண்ணிக்கை அபிவிருத்தி போன்ற விடயங்களில் முஸ்லிம்களின் விகிதாசார அடிப்படையில் அவர்களுக்கு சம உரிமைகள் வழங்கப்பட வேண்டும்.
- ❖ தொல்பொருள் திணைக்களத்தின் ஊடாக புனித பூமிகள் என்ற போர்வையில் அப்பாவி முஸ்லிம் மக்களின் காணிகளை அபகரிக்கும் பௌத்த தேசிய வாதத்தின் முயற்சிகள் தடை செய்யப்பட வேண்டும்.
- ❖ முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பிரதேசங்களில் அத்துமீறி சிலைகள் வைப்பதனையும் அப்பிரதேசத்தில் பதற்றத்தை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடுகளை கடும்போக்கு பௌத்த இயக்கங்கள் நிறுத்த வேண்டும்.
- ❖ மூவின மதத்தலைவர்களும் ஒன்றிணைந்து தத்தமது இனத்தவர்களிடையே இன நல்லிணக்கத்தின் அவசியத்தையும் முக்கியத்துவத்தினையும் வலியுறுத்திக் கூறுவதோடு முஸ்லிம்கள், பௌத்தர்கள், தமிழர்கள் ஆகியோர் உடன்பிறவா சகோதரர்கள் என்ற எண்ணக்கருவினை மூவின மக்கள் மத்தியிலும் உண்டு பண்ணி எதிர்கால நல்லிணக்கத்திற்கு வழிவகுக்க வேண்டும். முக்கியமாக இளைஞர்களை இலக்காக வைத்து இப்பணி முன்னெடுக்கப்பட வேண்டும். ஏனெனில் கண்டிக் கலவரத்தின் போது பின்னணியில் இருந்த அதிகமானோர் இளைஞர்களாவர்.
- ❖ சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற சட்டவாட்சிக் கோட்பாடு நிலை நிறுத்தப்பட வேண்டும். பௌத்த பிக்குவிற்கு ஒரு சட்டம், அப்பாவி

மக்களுக்கு ஒரு சட்டம் என்கின்ற நிலைமையானது மாற்றப்பட்டு அனைவரும் சட்டத்தின் முன் சமனாக கருதப்பட வேண்டும்.

- ❖ அரசாங்கமானது எதிர்காலத்தில் இவ்வாறான இனக்கலவரங்கள் இடம்பெறாமல் இருக்க சட்டத்தினை இறுக்கமாகப் பேணி இவ்வாறான இனக்கலவர சேயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு எதிராக அதியுயர் தண்டனை ஆகிய மரண தண்டனையினை அல்லது அதற்கு நிகரான ஒரு தண்டனையினை வழங்குவதோடு நீதித்துறை சுயாதீனமாக செயற்பட இடமளிக்கப்பட வேண்டும்.
- ❖ அரசாங்கமானது சமூக வலைதளங்களை தங்களது மேற்பார்வையின் கீழ் தொடர்ந்தும் வைத்திருத்தல் வேண்டும். சமூக வலைத்தளம் ஊடாகவே திகன கலவரத்திற்கு ஆட்கள் சேர்க்கப்பட்டனர். அது மட்டுமல்லாது கலவரம் பற்றிய பல பிழையான கருத்துக்களை பொதுமக்கள் மத்தியில் பரப்பியது. எனவே அரசாங்கம் இனவாதத்தை கட்டுப்படுத்தும் நோக்குடன் சமூக வலைத்தளங்களை மேற்பார்வை செய்வது சாலச்சிறந்தது.

எனவே மேற்கூறிய பரிந்துரைகளை தொகுத்து நோக்குமிடத்து இவற்றினைப் பின்பற்றுவதன் மூலம் இலங்கையில் இனங்களுக்கு இடையில் இன நல்லிணக்கத்தினை ஏற்படுத்தி அவற்றிற்கு தடையாக இருக்கும் காரணிகளை களைவதன் மூலம் இலங்கையில் மற்றுமொரு இனக்கலவரம் ஏற்படாமல் இருக்க இவ் பதிந்துரைகள் உதவியாக இருக்கும் என நம்புகின்றேன்.

**உசாத்துணைகள்**

Jeyadeva Uyangoda, (2005), *Conflict, Conflict Resolution & peace Building: An introduction to Theories and practices*, (IMCAP) University of Colombo.

Hug miall, Oliver Ramsbothom, Tom woodhouse, (1997), *Contemporary Conflict Resolution*, Polity press.

Paul Smoker, Ruth Davices, Barbara. (1990), *A Reader in Peace Studies*, Pergamon press.

அப்துல் ஜப்பார்.எம். (2016). *சமாதானமும் சமூக நல்லிணக்கமும்.* இலங்கைத் தென்கிழக்கு பல்கலைக் கழகம்

அனஸ், எம்.எஸ்.எம். அமீரிதீன், வி. வஸீல், ஏ.ஜே.எஸ். (2003). *இலங்கையில் இனக்கலவரங்களும் முஸ்லிம்களும்.* தகவல் மற்றும் நலன்புரி அமைப்பு, போராதனை.

ஆலிப், எஸ்,எம். றிஸ்வான், எம். (2014) *அரசியல் சமூகவியல்,* IBH Publication, கொழும்பு.

ஆலிப், எஸ்,எம். (2015), *இலங்கையில் முரண்பாடும் சமாதானமும்.* ஈஸ்வரன் புத்தக ஆலயம், கொழும்பு.

இ.ஃஜாஸ், எம்.எம். சிவகுமார், என். பௌசர், எம்.ஏ.எம். ரமேஷ், இரா. (2015). *சமகால அரசியல் எண்ணக்கருக்கள். தகவல் மற்றும் நலன்புரி அமைப்பு*, போராதனை.

இம்ரான், எம்.வை.எம். (2017). *அளுத்கம கலவரம். அரசியல் விஞ்ஞான சங்கம்*, இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம்.

சர்ஜூன், ஏ. றிபான், ஏ.எம். (2012). *சமகால அரசறிவியல் எண்ணக் கருக்கள்*, இலங்கை இஸ்லாமிக் புக் ஹவுஸ்.

அபூ அப்தான், (2018, ஏப்ரல்). *கண்டிக் கலவரத்தின் பின்னணி.* உண்மை உதயம். ப-27.

தரிந்து உடுவரதகெதர (2018, ஏப்ரல்), *திகன தெல்தெனிய தாக்குதல்கள் சுருக்கமாக.* சமாதானப் நோக்கு - மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் வெளியீடு.

புஞ்சிஹேவா, எஸ்,ஜீ. (2018, ஏப்ரல்), *இனவாதம் முடிவுக்கு வந்துவிட்டதா.* சமாதான நோக்கு மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் வெளியீடு.

பிறவ்ஸ் (ஒக்டோபர் 2017 – ஏப்ரல் 2018), *கண்டி திகன கலவரம் ஒரு பார்வை.* சாட்சியம் - ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ்

பேராசிரியர் சிரிஹெட்டிகே (2018, ஏப்ரல்), *இனமோதல்கள் மொழியும் கல்வியும். சமாதான நோக்கு - மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையத்தின் வெளியீடு.*

ஹிஷாம், ஏ,ஜீ. (2018, ஜுலை). *இலங்கையில் மீண்டும் தலை தூக்கும் தமிழ் இனவாதம்.* அழைப்பு. ப-02

கபூர் ஜின்னா, யு,எல்,எம். (2018. மார்ச். 17). *தமிழ், முஸ்லிம் இணைந்து செயற்படுவதன் அவசியம்.* தினக்குரல். ப-26

சதீஷ் கிருஷ்ணபிள்ளை. (2018. மார்ச். 18). *சமூக ஊடகங்களும் உலக நெருக்கடிகளும்.* வீரகேசரி ப-03

சரவணன், என். (2018. மார்ச். 11). *பகுத்தறிவையும் பட்டறிவையும் சீண்டும் சிங்கள பௌத்த தேசியவாதம்.* தினக்குரல். ப-27

சரவணன், என். (2018. மார்ச். 18). *ஒரு பேயின் இதிகாசம் மஹாசொன் பலகாய.* தினக்குரல். ப-27

சஹாப்தீன். (2018. மார்ச். 11). *முஸ்லிம்கள் மீதான தாக்குதல்களின் சூத்திரதாரிகள்.* வீரகேசரி ப-2

திருமலை நவம். (2018. மார்ச். 10). *வன்முறையின் குறிக்கோள.* வீரகேசரி. ப-14

பிரபாகன். (2018. மார்ச். 11). *சிறுபான்மை இனங்களுக்கு எதிரான அடக்குமுறை.* வீரகேசரி. ப-09

றிபான், எஸ். (2018. மார்ச். 23). *வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டது காடையர்களா இனவாதிகளா.* ப-05

ரவீந்திரன், வி,கே. (2018. மார்ச். 18). *இளைஞர்களை வழிப்படுத்தும் பொறிமுறைகள் மூலமே இன வன்முறைகளை இல்லாதொழிக்கலாம்.* வீரகேசரி ப-10

லத்தீப் பாரூக். (2018. மார்ச். 11*). சட்டத்தை தன் கையில் எடுத்துக்கொண்ட இனவாதிகள்.* வீரகேசரி. ப-12

நிலாந்தன். (2018. மார்ச். 11*). முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல் பயனடைந்திருப்பது யார்?”.* தினக்குரல். ப-25

மாணிக்கவாசம், பி. (2018. மார்ச். 14). *வரவாற்றில் தொடரும் வன்முறை.* வீரகேசரி. ப-14.

மாணிக்கவாசகம், பி. (2018. மார்ச். 10). *வன்முறையின் பின்னணி என்ன.* வீரகேசரி ப-10

ஸமட், எம்.எம்.ஏ. (2019. பெப்ரவரி. 14). *இனவாதிகளின் புலக்காட்சி.* விடிவெள்ளி ப-7